**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 189/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செந்தில் குமார் | த–பெ /க.பெ. | ராமன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2026**

-----------------------------------------------------------------------------------------------------

**04.06.2026**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 31.03.2024 வடி 31.03.2025 புகார்தாரரின் சென்ரல் பேங்க் ஆப் இந்தியா, காரைக்குடி கிளை **வங்கி கணக்கு பட்டியல் உண்மை நகல் ம.சா.ஆ.1 ஆகும்.** கடந்த 30.05.2025 புகார்தாரருக்கு எதிரி கொடுத்த **Confirmation letter கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.2 ஆகும்.** கடந்த 07.06.2024 புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே ஏற்பட்ட **கிரைய ஒப்பந்தம் அசல் ம.ச.ஆ.3 ஆகும்.** கடந்த 24.02.2025 புகார்தாரருக்கு எதிரி ஞா.ஜெய்கிந்ராஜ், ஞா.கபிலன், ஞா.கோகுல் பிரசாந்த் ஆகியோர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்த **கிரையப்பத்திரம் பதிவு எண் 807/2025 சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4 ஆகும்.** கடந்த 25.02.2025 புகார்தாரருக்கு, எதிரி மற்றும் அதிஸ்டலெட்சுமி ஆகியோர்கள்

சேர்ந்து எழுதிக்கொடுத்த **கிரையப்பத்திரம் பதிவு எண் 801/2025 சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5 ஆகும். புகார்தாரருக்கு எதிரி எழுதிக்கொடுத்த கடிதம் அசல் ம.சா.ஆ.6 ஆகும்.** கடந்த 13.06.2025 புகார்தாரருக்கு எதிரி கொடுத்த ரூ.40,00,000/-க்கான AXIS வங்கி மெக்கிழார்பட்டி கிளை **காசோலை ( காசோலை எண் 038981) அசல் ம.சா.ஆ.7 ஆகும்.** கடந்த 16.06.2025 ல் payment stopped by drawer என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அ.சா.ஆ.8 ஆகும்.** கடந்த 19.06.2025 புகார்தாரருக்கு எதிரி கொடுத்த ரூ.28,24,000/-க்கான AXIS வங்கி மெக்கிழார்பட்டி கிளை **காசோலை (காசோலை எண் 038977) அசல் ம.சா.ஆ.9 ஆகும்.** கடந்த 16.06.2025 ல் payment stopped by drawer என்ற காரணம் கண்டு திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அ.சா.ஆ.10 ஆகும்.** கடந்த 30.06.2025 அன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ 11 ஆகும்.** கடந்த 01.07.2025 அன்று எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **ம.சாஆ.12 ஆகும்.** கடந்த 09.07.2025 அன்ற எதிரி, புகார்தாரருக்கு அனுப்பிய **பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ. 13 ஆகும்.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை – ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.04 05:32:23 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.